# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

**Volume-13** **June-2023** **Issue-01**

**Price Rs.5-00** **Annual Subscription Rs.60/-**

## திரித்துவத் திருநாள்

பரலோகத்தில் சாட்சியிடுகிற பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி ஆகிய இம்மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள்.
1யோவான்-5:7



**திரித்துவ ஞாயிறு : 04–06–2023 : TRINITY SUNDAY**



## இயக்குநர் கடிதம்... From Mssion Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் எங்கள் அன்பின் 'திரித்துவத் திருநாள்' மற்றும் 'புதிய-கல்வியாண்டு' நல்வாழ்த்துக்கள். பள்ளிகள், கல்லூரிகள் திறக்கப்பட்டுவிட்டன. புதிய பள்ளிகளுக்கு புதிய கல்லூரிகளுக்கு, புதிய வகுப்புகளுக்குச் செல்லும் நம் பிள்ளைகளக்கு கிருபை வரங்களும் ஞானவரங்களும் வழங்கப்பட ஜெபித்துக்கொள்வோம். இந்த மாத மும் கோடை-வெயிலின் தாக்கம் தொடரும். எனவே, நம்மையும் பிள்ளைகளையும் மிக கவனத்துடன் பாதுகாத்துக்கொள்ளுவோம்.

கடந்த ஆண்டில் (2022) நடத்தப்பட்ட இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பரிசுபெற்ற வர்களுக்கு இம்மாத இறுதிக்குள் பரிசுகள் வழங்கப்படும்.

நமது ஊழிய இயக்குநரின் இம்மாத ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். 'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.in/ratchippu.in), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், NMS-MISSIONARY ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் ஆகிய அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்ளில் (ஜூன் 9, 16, 23) இணைந்து ஜெபிக்கவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் (விபரம்: பக்கம்-19ல்) இணைந்து செயல்படவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குந ரின் பெயருக்கு அனுப்புங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 12-ல்).

கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

வேத-வரிகள்-150 2கொரிந்தியர்-13:14

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், பராபரனின் அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கிய மும், உங்கள் அனைவருடனும் இருக்கக்கடவது. ஆமென் ஆமென். | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கிய மும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ஆமென். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும், தூய ஆவியாரின் நட்புறவும், உங்கள் அனைவரோம் இருப்பதாக. ஆமென். ஆமென். | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனின் அன்பும், பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமும், உங்கள் அனைவரோடும் இருப்ப தாக. ஆமென். ஆமென். |

திரித்துவத் திருநாள் சிறப்பு தேவசெய்தி...

# தூய திரித்துவத்தின் சிறப்பியல்புகள்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். 1கொரி-13:14



அருட்திரு. தர்மராஜா

**Rev. S.J.D. DHARMARAJA**

MISSSION DIRECTOR, GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES,

SALIGRAMAM, SALIGRAMAM, CHENNAI-93, SOUTH INDIA

திரித்துவம் பற்றிய வகுப்பை நடத்தும் வேத அறிஞர் ஒருவர், திரித்துவம் ஒரு மர்மம் அல்லது புதிர் (Mystery) என்று கூறுகிறார். எனவே திரித்துவத்தின் மறைபொருள் மற்றும் சிறப்புத் தன்மைகளை புரிந்துகொள்ள நாம் அழைக்கப் படுகிறோம். திரித்துவத்தின் முக்கிய அம்சம் என்னவென்பதை நாம் அனைவரும் அறிவோம். அதாவது ஒரு கடவுள் - மூன்று நபர்கள் - தந்தையாகிய கடவுள், மைந்தனாகிய கடவுள், மற்றும் தூய ஆவியாகிய கடவுள் (மத்-28:19) என்பதுதான்.

திரித்துவத்தின் இரகசியத்தை நாம் ஆதியாகமம் புத்தகத்தில் தெளிவாகக் காண்கிறோம். ‘‘அப்பொழுது தேவன், நம்முடைய சாயலிலும் நமது ரூபத்தின் படியும் மனுஷரை உண்டாக்குவோமாக’’ (ஆதி-1:26) என்றார். ‘நமது’ என்பதன் அர்த்தம் என்ன? ‘நமது’ என்பது பன்மை என்பதை நாம் அறிவோம். கடவுள் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆளுமைகளாக படைக்கும் பணியில் சமூகமாக செயல் பட்டதை இது காட்டுகிறது. எனவே, படைப்பில் திரித்துவமானது புதிர் பொருளாக அடங்கியிருந்தது என்பதை நாம் புரிந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

‘கடவுள்’ என்பவர் திரித்துவத்தின் பொதுவான கருப்பொருள். அவரது மூன்று ஆளுமைகள் பிதா, குமாரன், தூய-ஆவி என்பவர்கள். இவ்விதமாக, மூவொரு கடவுளின் சிறப்புப் பண்புகளை அடையாளம் காண இங்கு நாம் அழைக்கப்படு கிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு கடவுள், மூன்று நபர்களாக பரஸ்பர அன்பு, பரஸ்பர இணைப்பு, பரஸ்பர ஒற்றுமை என்னும் அர்த்தமுள்ள உறவுகளில் பொதுவான குணாதிசயங்களை உடையவராக காணப்படுகிறார்.

நமது குடும்பம் மற்றும் ஐக்கியத்தை துடிப்பானதாக மாற்ற, திரித்துவ பண்புகள் நம்மில்

அவசியம் தேவை. திரித்துவ குணாதிசயங்கள் எவ்வாறு நம் குடும்பம்மற்றும் சமுதாயத்தில் நம்மை வழிநடத்தும் என்பதை சிந்திப்போம்.

1. பரஸ்பர அன்பு:

இயேசுவின் ஞானஸ்நானத்தின்போதும், மறுரூபக் காட்சியின்போதும், ‘‘இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்’’ என தந்தையாம் கடவுள் சொல்கிறார் (மத்-17:5, மத்-3:17).

இயேசுவும் தனது போதனையில், ‘‘நான் என் பிதாவின் அன்பில் நிலைத்திருப்பதுபோல் நீங்களும் என் அன்பிலே நிலைத்திருக்கவேண்டும் (யோவா-15:10மு), அதற்காக, நீங்கள் கடவுளின் கட்டளைகளை கடைபிடிக்கவேண்டும்’’ எனச் சொல்கிறார் இவ்வாறு ஒருவருக்கொருவர் பரஸ்பர அன்பு கொண்டிருப்பதை திரித்துவம் வெளிப்படுத்துகிறது.

பிதாவாகிய கடவுள், குமாரனாகிய கடவுள் மற்றும் ஆவியான கடவுள் ஆகிய மூவரும் ஒருவரிலொருவர் ஆழ்ந்த அன்பில் உள்ளனர். அவர்கள் பரஸ்பர அன்பு, மரியாதை மற்றும் சமத்துவம் உடையவர்கள். கடவுள் தனது சொந்த அன்பினால் பூமியையும் வானத்தையும் படைத்தார், அதே கடவுள் தனது ஒரே மகனை படைப்பின் மீதான அன்பினால் அனுப்பினார் (யோவா-3:16).

மீண்டும் கடவுள் தனது பணிக்காக அன்பினால் தூய ஆவியை அனுப்பினார். திரித்துவ கடவுளின் இந்த பரஸ்பர அன்பை நாமும் கடைபிடிக்க கடவுள் விரும்புகிறார்.

வேதம் சொல்லுகிறது: ‘‘நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.’’ (யோவா-15:10பி).

நாம், நமது குடும்பத்திலும், சமுதாயத்திலும் அதிகாரம், ஆதிக்கம், அந்தஸ்து, பட்டம், பதவி வேறுபாடின்றி அனைவரையும் அன்புடனும், மரியாதையுடனும் சமத்துவத்துடனும் நடத்த வேண்டும். திரித்துவ கடவுளின் பரஸ்பர அன்பு நம்மை பரஸ்பர இணைப்பிற்கு நேராக வழிநடத்தும்.

2. பரஸ்பர இணைப்பு:

வேதம் சொல்லுகிறது: தேவனால் அனுப்பப்பட்டவர், தேவனுடைய வார்த்தை களைப் பேசுகிறார், தேவன் அவருக்கு தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார் (யோவா-3:34). இங்கு திரித்துவ கடவுளாக தந்தை, மைந்தன், தூய-ஆவி ஆகிய மூவரும் இணைந்து செயல்படுகின்றனர்.

திரித்துவத்தில் தந்தையாகிய கடவுள், மைந்தன் மற்றும் தூய-ஆவியானவராகிய கடவுளுடன் இணைக்கப்பட்டுள்ளார். குமாரனாகிய கடவுள், தூய-ஆவி மற்றும் தந்தை யாகிய கடவுளுடன் இணைக்கப்பட்டுள்ளார். மட்டுமல்ல தூய-ஆவியாகிய கடவுளும், தந்தை மற்றும் குமாரனாகிய கடவுளுடன் இணைக்கப்பட்டுள்ளார். திரித்துவத்தில் இவ்வாறாக தொடர்பு இருப்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறாகவே, நம்முடைய குடும்பத்திலும் சமூகத்திலும் இணைப்பு இருப்பதை நாம் உறுதிப்படுத்தவேண்டும். என் சகோதரன் அல்லது என் சகோதரி அல்லது எனது குடும்ப உறுப்பினர், எனது நண்பர் அல்லது எனக்கு அன்பானவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் என்னவாக இருந்தாலும் நான் அவர்களுக்குத் துணை நிற்கிறேன் அல்லது

ஆதரவளிக்கிறேன் என்ற நிலைப்பாட்டில் உறுதியாய் இருப்பது மிகமிக அவசியமாகும். குடும்ப-சமுதாய பணிகளை இத்தகைய பரஸ் பர இணைப்பின் மூலம் நிறைவேற்றுவது அவசியமானதாகும்.

இயேசு கெத்செமனே ஜெபத்தில், ‘‘அப்பா, பிதாவே, இந்தக் பாத்திரத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும், என் சித்தப்படி அல்ல, உம் சித்தப்படியே ஆகக்கடவது’’ (மத்-14:36) என்றார். ‘‘அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்’’ (லூக்-22:43). (தந்தையாம் கடவுள் ஒரு தூதனை அனுப்பி குமார னாகிய கடவுளை பலப்படுத்தினார்). நமது பொறுப்பு களில் ஒருவருக்கொருவர் ஒத்து ழைப்பதும், ஒருவரையொருவர் ஊக்கப்படுத்துவதும், ஆக்கப்பூர்வமான பணிகளை - அது சிறிய பணியாக இருந்தாலும் -அதை பாராட்டி எற்றுக்கொள்வதும் திரித்துவ கடவுளின் இந்த பரஸ்பர இணைப் புக்கு நேராய் நம்மை வழிநடத்தும். (இயேசு பல சந்தர்ப்பங்களில் பலரைப் பகிரங்கமாகப் பாராட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது).

3. ஒற்றுமை:

இயேசு சொன்னார்: ‘‘நானும் என் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம்.’’ (யோவா-10:30) மட்டுமல்ல, நான் என் பிதாவுக்கு பிரியமானதை செய்கிறபடியால் அவர் என்னை தனித்திருக்க விடவில்லை’’ (யோவா-8:29) என்றும் சொன்னார். இது திரித்தவத்தின் ஒற்றுமையைக் காட்டுகிறது. தனிப்பட்ட எண்ணங்களையும் உணர்வுகளையும் ஒருவரோ டொருவர் பகிர்ந்துகொள்வதை மொழி-அகராதி, ‘ஒற்றுமை’ என்று வரையறுக்கிறது. பிதாவாகிய தேவன் தம்முடைய தனிப்பட்ட எண்ணங்களையும் உணர்வுகளையும் தம் குமாரனிடமும், அவருடைய ஆவியான வரிடமும் வெளிப்படுத்துகிறார். உலகத்தையும் மீட்டு நம் அனைவரையும் தம் சொந்த பிள்ளைகளாய் ஆக்குவதற்காக குமாரனாகிய கடவுளை சிலுவையில் அறைய இந்த உலகத்திற்கு அனுப்பும் உணர்வை குமாரனிடம் பகிர்ந்துகொண்டு அதற்கு செயல்வடிவம் கொடுக்கிறார். நம் குடும்பத்திலும் சமூகத்திலும்கூட, நாம் நம் தனிப்பட்ட எண்ணங்களையும் உணர்வுகளையும் ஒருவருக் கொருவர் பகிர்ந்து கொள்ள வேண்டும். குடும்பம், திருச்சபை அல்லது சமூகம் ஒற்று மையாக இருக்க, ஆக்கபூர்வமான ஆலோசனைகளும் விமர்சனங்களும் அவசியம். இத்த கைய தனிப்பட்ட மதிப்புமிக்க, பயனுள்ள, நன்மை பயக்கும், ஆக்கபூர்வமான கருத்துக்கள் குடும்பம் மற்றும் சமுதாயத்தில் ஒற்றுமையை உருவாக்குகின்றன. நாம் சில சமயங்களில் நமது அறியாமையால் நம் பொறுப்பைச் சரியாக நிறைவேற்ற முடிவதில்லை. இத்தகைய சூழ்நிலைகளில் நமக்குத் தேவை விமர்சனம் ஆகும் (நேர்மறை அல்லது எதிர்மறை). ஆக்கபூர்வமான விமர்சனங் கள் அர்த்தமுள்ள மற்றும் நெருக்கமான உறவுகளை உருவாக்குகின்றன.

4. அர்த்தமுள்ள உறவு:

பரஸ்பர உறவு இருவழி செயல்முறை கொண்டது. பரிசுத்த திரித்துவம், ஒருவரிடம் ஒருவர் கொண்டுள்ள அர்த்தமுள்ள பரஸ்பர உறவில் உள்ளது. பிதா, குமாரன் மற்றும் ஆவியானவர் ஆகியோரின் திரித்துவ உறவு போன்ற உறவுகள் நம் வாழ்க்கைக்கு அர்த்தத்தைத் தருகின்றன. இத்தகைய அர்த்தமுள்ள உறவைப்பெற, நமது அணுகுமுறை

மற்றும் நடத்தையில் நேர்மறையான மாற்றங்களைக் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். நேர்மறையான மாற்றம் என்பது என்ன? இயேசு கெத்செமனேயில் ஜெபித்தார். ‘‘அப்பா, பிதாவே, இந்தக் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்.; ஆனாலும், என் சித்தப்படி அல்ல, உம் சித்தப்படியே ஆகக்கடவது’’ (மத்-14:36) என்றார். இவ்வாறு இயேசு, துன்பத்தின் பாத்திரத்தை தம்மிடமிருந்து நீக்கும்படி ஜெபித்தபோது கடவுள் அவ்வாறு நீக்கவில்லை இதனால் இயேசு ஏமாற்றமடையவில்லை. மாறாக, இயேசு நேர்மறையான மாற்றத்தைக் கொண்டிருந்தார். தான் உலகில் வந்ததற்கு ஒரு அர்த்தம் உண்டாக்கும்பொருட்டு அவர் துன்பங்களைத் தாங்கினார். சிலுவையில், தந்தையாகிய கடவுளுடன் உள்ள அர்த்தமுள்ள உறவை இயேசு உணர்ந்தபோது அவர் ஒரு மாற்றுருவாக்கப்பட்ட மனிதராக இருந்தார். அவர் சிலுவையில்: ‘‘தந்தையே, இவர் களை மன்னியும்; தாங்கள் செய்கிறது என்ன என்று அவர்களுக்குத் தெரியாது’’ (லூக்-23:34) என்று கூறினார். இதுதான் அர்தமுள்ள பரஸ்பர உறவுக்கான ஒரு அடையாளம்.

மற்றொரு சம்பவம்: இயேசு தம் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு தம் சீடர்களுக்குத் தோன்றியபோது, ‘‘உங்களுக்குச் சமாதானம்’’ (யோவா-20:19) என்றார், மீண்டும் தோன்றியபோதும், ‘‘உங்களுக்குச் சமாதானம்’’ (யோவா-20:21) என்றே இயேசு கூறினார். தம்முடைய சீடர்களுடனான இயேசுவின் அர்த்தமுள்ள உறவு நேர்மறை யானதாகவே இருந்தது. அது எதிர்மறையானதாக ஒருபோதும் மாறவில்லை. சீடர்கள் அவரைக் காட்டிக்கொடுத்தாலும், மறுத்தாலும், சந்தேகித்தாலும், அவரை விட்டு ஓடிவிட்டாலும் இயேசுவின் அர்த்தமுள்ள உறவு மாறிடவில்லை. நாமும், கடந்தகால காயங்களையும், கசப்புக்களையும், வேதனைகளையும் சேர்த்து வைத்திருக்காமல் நேர்மறையான நமது உறவுகளால் வாழ்விற்கு ஒரு அர்த்தத்தை உருவாக்குவோம். அது நமக்கும் நம் சமுதாயத்துக்கும் அமைதியைத் தரும்.

திரித்துவ கடவுளின் பரஸ்பர அன்பின் உருவாக்கத்தை நாம் கொண்டாடுவோம், திரித்துவ கடவுளின் அன்பு, இணைப்பு மற்றும் ஒற்றுமை மற்றும் அர்த்தமுள்ள உறவுக்குள் கடவுளின் ராஜ்யத்தை கட்டியெழுப்பும் பணியில் நாம் பங்கேற்போம்.

கடவுள் மீதும், நம்மைச் சூழ்ந்திருக்கும் மக்கள் மீதும், நம்-மீதும் அன்புகூர்ந்து, ஒருவரையொருவர் ஆதரித்து ஒத்துழைப்போம். மக்கள் தோல்வியடையும் போது ஊக்குவிப்போம், மக்கள் ஒரு சிறிய நற்செயலைச் செய்தாலும் அதைப் பாராட்டு வோம், ஆக்கபூர்வமான விமர்சனங்களை ஏற்றுக்கொள்வோம், திரித்துவத்தின் இரகசியத்தைப் புரிந்து கொண்டு நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்துவோம். குடும்பத்திலும் திருச்சபையிலும் ஆரோக்கியமான உறவுக்கு நேராய் திரித்துவம் நம்மை வழிநடத்தும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய-இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு மற்றும் இரட்சிப்பு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

# நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## Good Tidings Bible-Prints Ministries

(GOOD SEEDS - எமது கைப்பிரதிகள் - நல்ல விதைகள்)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் மட்டுமல்ல சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.4000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும் படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மாணக்கின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

வேத ஆராய்ச்சி - 73



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Episode - 73

Author: Rev. Dr. D. Suresh

## சங்கீதம் – 73

முன்னுரை:-

தாவீதின் அரன்மனைக் கவிராயரான ஆசாப் என்பவரால் இச்சங்கீதம் எழுதப் பட்டதாக குறிப்பிடப்படுகிறது. மனித வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள் பயங்கள் சந்தேகங்கள் ஆகியவற்றின் மத்தியில் இறைவனைச் சார்ந்த விசுவாசப் பயணத் தில் விசுவாசிகளுக்கு வழிகாட்டும் ஒளியாக இச்சங்கீதத்தைக் காணலாம்.

1. துன்மார்க்கரின் வாழ்வு:-

வசனம்-3 மற்றும் அதைத் தொடர்ந்து வரும் வசனங்களில், தீய வழியில் நடப்பவர்களின் தற்காலத்து சுகவாழ்வு, ஒரு சாதாரண மனிதனின் மனதை எந்த அளவுக்கு பாதிக்கக்கூடும் என்பதை சங்கீதக்காரர் அழகாக விளக்குகிறார். தேவனுக்கு பயந்து வாழும் சாதாரண மக்கள் வாழ்வில் பல இன்னல்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிற அதே வேளையில், தங்கள் மனம்போனபடி மாமிச இச்சையை அனுபவித்து வாழ்ந்து அநியாயம், அக்கிரமத்தை செய்துவரும் துன்மார்க்கர் உலகப்பிரகாரமாக செழித்து வாழ்வது கடவுள் மீதான ஒரு கேள்விக்குறியாகவும், இறைப் பற்றுறுதிக்கு ஒரு சாவாலாகவும் இருக்கிறது.

சங்கீதக்காரர் இங்கு பட்டியலிடும் பல விஷயங்கள் நம் மனதிலும் இன்று, அதே கேள்வியை எழுப்புவதாக இருக்கின்றன. துன்மார்கர் குறித்து சங்கீதக் காரர் சொல்வது பின்வருமாறு:

1. சாகும்வரை துன்பமில்லை (வச-4) 2. நல்ல பலத்துடன் உள்ளனர் (வச-4)
3. பிறர்போல் துன்பப்படவில்லை (வச-5) 4. பெருமை உடையவர்கள் (வச-6)
5. கொடுமையானவர்கள் (வச-6) 6. கண்களில் பெருமையுண்டு (வச-7)
7. விரும்பியது கிடைக்கிறது (வச-7) 8. இறுமாப்பாய் பேசுபவர்கள் (வச-8)
9. எல்லாம் தெரிந்தவர்கள்போல் பேசுகிறவர்கள் (வச-9)
10. இறைவனுக்கு ஒன்றும் தெரியாது என்கிறவர்கள் (வச-11)
11. சுகஜீவிகளாய் இருக்கிவர்கள் (வச-12)
12. ஆஸ்தியை பெருகப்பண்ணுகிறவர்கள் (வச-12)

இன்றும் நம்மில் அநேகர் இத்தகைய பொல்லாத குணங்களுடன் வாழ்ந்து, நேர்மையாக வாழ்பவர்களுக்கு விசுவாச-சோதனையை உண்டு பண்ணுகிறவர்களாய் இருக்கிறோம்.

மட்டுமல்ல நமது சபைகளிலும், சங்கங்களி லும் இப்படிப்பட்டவர்களை அதிகமாகக் காண்கிறோம். இன்று நம்மைநாமே தற்பரிசோதனை செய்து, நம்மிலுள்ள துர்குணங்களைக் களைந்து கடவுளுக்குப் பிரியமான பிள்ளைகளாக வாழ முற்படுவோம்.

2. சுத்த இருதயமுள்ளவர்களின் முடிவு:-

துன்மார்க்கர் மாத்திரமே சுகித்திருப்பார்களா? தேவனைச் சார்ந்து வாழ்வதினால் என்ன பயன்? போன்ற கேள்விகள் நமக்கும் மனதில் எழுவது இயற்கைதான். சங்கீதக்காரர், ''சுத்த இருதயமுள்ளவர்களாகிய இஸ்ரவேலருக்கு தேவன் நல்லவராகவே இருக்கிறார்,'' (வச-1). நீதிமான்களுக்கு வாழ்வில் 'சறுக்கி விழுவது' போன்ற அனுபவங்கள் ஏற்படலாம். ஆனால், அவர்கள் விழுவதில்லை (வச-2). மாறாக கர்த்தர், ''துன்மர்க்கரை சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறார்.'' (வச-18) என இப்பாடலில் தெளிவாகச் சொல்லுகிறார். மட்டுமல்ல, 'கடவுளைவிட்டு தூரமாய்ப் போகிறவர்கள் நாசமடைவார்கள்' (வச-27) என்றும் அவர் கூறுகிறார்.

துன்மார்க்கத்தை விட்டு விலகி கர்த்தருடைய மார்க்கத்தாராய் பயபக்தியுடன் வாழ்ந்து 'சுத்த இருதய முடையவர்கள்' என்ற சாட்சியின் வாழ்வைப் பெற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்குப் பெலன் தந்தருள்வாராக.

3. தேவனைச் சார்ந்த வாழ்வு:-

''ஆனாலும் நான் எப்பொழுதும் உம்மோடிருக்கிறேன், என் வலதுகையைப் பிடித்துத் தாங்குகிறீர்.'' (வச-23). இங்கு, தாம் எப்பொழுதும் கடவுளுடன் வாழ்வதாக சங்கீதக்காரர் கூறுகிறார். பெரும்பாலான சமயங்களில் ஞாயிற்றுக் கிழமை மாத்திரமே தேவனைத் தேடுகிறோம். மற்ற ஆறு நாட்களும் நமக்கும் தேவனுக்கும் எந்த தொடர்பும் இல்லாத வர்கள்போல் நடந்து கொள்கிறோம். 'இறைவனோடு எப்பொழுதும் தொடர்புடையவர்கள், அவருடைய ஆலோசனை களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.' என்பதை வசனம்-24ல் காண்கிறோம். நம் வாழ்வு எவ்வாறு இருக்கிறது என்பதை சற்றே சிந்திக்க அழைக்கப் படுகிறோம். பூலோகத்திலானாலும், பரலோகத்திலானாலும் இறைவனுடைய அநுக்கிரகம் இல்லாமல் நமக்கு எந்த ஆசீர்வாதமும் கிடைக்க வாய்ப்பே இல்லை (வச-24, 25).

ஆகவே, ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் இவ்வுலகில் வாழும் நாட்களில் அவரை மாத்திரமே சார்ந்த வாழ்க்கை வாழவேண்டும் (வச-25).

முடிவுரை:-

''எனக்கோ, தேவனை அண்டிக்கொண்டிருப்பதே நலம். நான் உமது கிரியை களையெல்லாம் சொல்லிவரும்படி கர்த்தராகிய ஆண்டவர்மேல் என் நம்பிக் கையை வைத்திருக்கிறேன்'' (வச-28) என்ற சங்கீதக்காரரின் கூற்றின்படி, தேவன் மேல் நம் நம்பிக்கையை வைத்து, அவருக்குச் சாட்சியாய் வாழ ஆண்டவர்தாமே அருள் தருவாராக. கர்த்தரை என்றும் நம்புவோம். கர்த்தருடைய மார்க்கத்தில் நடப்போம்.

கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-151 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
8) அன்னாள் ஜெபக்கனி CBE
9) அனி பாய் ஜாண் TIN
10) அனிதா மோகன்ராஜ் ERO
11) அரோமா சாத்ராக் TIN
12) ஆர்தர் மாசில்லாமணி CHE
13) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
14) பெல்சி தங்கராஜ் CHE
15) பெனிட்டா பிராங்க்ளின் CHE
16) பியூலா ஜேசுராஜன் PON
17) செலினா பென்சி வில்சன் DR, KUW
18) சந்திராபாய் மாசிலாமணி AVD
19) சந்திரலேகா KAL-AP
20) சந்திரா சாமுவேல் TIN
21) சார்லஸ் ஃபின்னி DR, CHE
22) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
23) சார்லட் டேவிட் CHE
24) சித்ரா பெஞ்சமின் TVL
25) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
26) கிறிஸ்துதாஸ் GOP
27) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR-TIN
28) கிறிஸ்டி ஞானராஜ் CHE
29)சிசிலி புஷ்பம் டேவிட் CHE
30) டெய்ஸி ஜெபதாஸ் TCY
31) டெய்ஸி சாம் TUT
32) டேனியல் தாமஸ் TIN
33) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
34) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
35) தெபோராள் ஆனந்தமணி TUT
36) தேவமணி ஆபிரகாம் TUT
37) தேவநேசம் ராஜாசிங் CHE
38) டோராபாய் CHE
39) எலிசபெத் செல்லத்துரை CHE
40) எமிமாள் JOL
41) எஸ்தர் D.R. TIN
42) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
43) குளோரி ரவீந்திரன் TIN
44) ஞானம் ஜெபராஜ் TIN
45) ஞானம் பிலிப் CHE
46) கோல்டா ஜேசுபாதம் MUM
47) கிரேஸ் டேனி TEN
48) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
49) கிரேனா அன்புரோஸ் CHE
50) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
51) கிரேஸியா ஜெயபால் CHE
52) கிரிசெல்டா செய்லர் CHE
53) ஹெலன் ஜான்சிராணி TIN
54) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
55) ஹெலன் திலக் TUT
56) ஹேமா அஜீத் CHE
57) ஹேமா கேப்ரியேல் BAN
58) ஹெப்சிபா மங்களராஜ் TIN
59) ஹிம்லா ராஜகுமாரி CHE
60) இளவரசி ஜோபிதா CBE
61) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
62) ஜமீலா செல்வராஜ் CHE
63) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
64) ஜேன் தர்மராஜ் TIN
65) ஜான்ஸி சந்தியா MKM
66) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
67) ஜெபா ஜெயராஜ் CHE
68) ஜெபக்குட்டி மோசஸ் TIN
69) ஜெபசீலி கிளின்டன்CHE
70) ஜெமீலா நிக்ஸன் CHE
71) ஜெனித்தா செல்வின் TIN
72) ஜெனித்தா ஷெருபா ஞானவேல் DHA
73) ஜெனிட்டா ஹெலன் CBE
74) ஜெரின் ஸ்டீபன் CHE
75) ஜெஸி செல்லதுரை CBE
76) ஜெஸி ஜெயக்குமார் TIN
77) ஜெயா ஆல்பர்ட் KUM
78) ஜோனா ஸ்டீபன் AVD
79) ஜோஸ்பின் ஜெஸி CHE
80) ஜாய்ஸ் பாண்டியன் CHE
81) ஜூலியட் CHE
82) ஜூலியட் ஜெயக்குமார் TIN

வேதாகம போட்டி-150 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

83) கலா கிருபாகரன் TIN
84) கலையரசி செல்வராஜ் CHE
85) கஸ்தூரி எலியாஸ் TIN
86) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
87) லீலா டேவிட் CHE
88) லீலா ஜோஸப் CBE
89) லில்லி ஜாண்ஸன் CHE
90) லிஸி டென்சிங் TIN
91) மேபல் கிறிஸ்டியான் CHE
92) மல்லிகா V. CHE
93) மணிமேகலை ஜெயக்குமார் TIN
94) மனோகரம் தனராஜ் NAZ
95) மரிய பாப்பா CHE
96) மரியாள் ஜே.எஸ். TUT
97) மெஜிலா ஜோஷ்வா TUT
98) மெர்சிபா CBE
99) மெர்சி தனராஜ் CBE
100) மெர்சி ∴புளோரா பாஸ்கர் VEL
101) மெரிட்டா ஜெயபாலன் TCY
102) மியூரியல் புஷ்பராஜ் CHE
103) நதியா லாரன்ஸ் TVR
104) நிக்ஸன் எவர்பிரைட் TIN
105) ஆலிவ் ஜெயபாலன் CBE
106) பாக்யபாய் ஆரோன் TIN
107) பமீலா எட்வின் KAN
108) பிங்க்லின் தேவமலர் CHE
109) பொன்மணி உத்தமசிங் NAZ
110) பிரேமா பூபாலன் AVD
111) பிரேமா ஜானி PCM
112) பிரேமா ஸ்டாலின் CHE
113) பிரின்ஸ் தயாநிதி CHE
114) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
115) பிரிசில்லா தாஸ் CHE
116) பிரிஸ்கில்லாள் சசி CBE
117) ராஜபிரமீளா TPT
118) ராஜ்மேரி சார்லஸ் KER
119) ரமோலா அதிசயராஜ் TIN
120) ராணி சாமுவேல்ராஜ் CHE
121) ரத்னாவதி பாண்டியன் CHE
122) ரெஜினா விக்டர் TIN
123) ரோஸ்லின் மார்கிரெட் CHE
124) ரோஸி ஸ்டீபன் CHE
125) ரூபவதி நோபிள் TIN
126) ரூத் ஜாண்ஸன் TIN
127) சலோமி மனோகர் DR. CHE
128) சாரா பாலசிங் MDU
129) சரோஜினி எலிசபெத் CHE
130) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
131) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
132) செல்வராஜ் K CBE
133) செல்வராணி ஆல்பர்ட் CHE
134) செல்வராணி G CHE
135) செல்வி அமிர்தராஜ் TVR
136) ஷாலி எடிசன் CHE
137) சாந்தி ஆசேர் TIN
138) சாந்தி ஆல்பர்ட் PCT
139) சாந்தி ஜெயசீலன் CHE
140) சாந்தி ரோஸ் CBE
141) ஷர்மீளா செல்வராஜ் DR. CUD
142) ஷீபா சாம்ஸன் CHE
143) ஷெரீன் ஜெபராஜ் PAN
144) சவுந்தரம் சாலமோன் CHE
145) ஸ்டெல்லா டேவிட் TUT
146) ஸ்டெல்லா கனகராஜ் CHE
147) ஸ்டெல்லா சூசைய்யா TUT
148) சுகிர்தா ஆல்வின் CHE
149) சுகிர்தா சின்னதுரை TIN
150) சுஜாதா சாமுவேல் CHE
151) சுசீலா தியோடர் TCY
152) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
153) தாரா மாணிக்கம் CHE
154) தெல்மா ஸ்டேன்லி MDU
155) வனஜா ஹெர்பர்ட் TIN
156) வசந்தா அன்பன் TIN
157) வசந்தா சந்திரசேகர் CBE
158) வசந்தி கருணாகரன் CHE
159) வசந்தி வாசன் CHE
160) விஜயராணி A. CHE
161) விஜி டேனியல் CHE
162) விமலா ஜெயக்குமார் TUT
163) விண்ணரசி ரோஸ் CHE
164) வினோலியா வில்சன் VAN
165) வைலட் கிறிஸ்டோபர் TIN
166) வெஸ்லி சாமுவேல் TUT

PRAYER-WINDOW PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஜூன் – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 09–06–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 16–06–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 23–06–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

# திரித்துவம் – 2023 – TRINITY

## 4th June 2023 Trinity Sunday – திரித்துவ ஞாயிறு ஜூன் 04, 2023

திரித்துவம் என்பது தந்தையாகிய கடவுள், மைந்தனாகிய கடவுள் மற்றும் பரிசுத்த ஆவியாகிய கடவுள் ஆகிய மூன்று (ஆளுமையுள்ள) நபர்கள் ஒரே தெய்வீகத்தில் ஐக்கியமாய் இருப்பதை விளக்கும் திருச்சபை கோட்பாடு ஆகும். இக்கோட்பாடு கடவுளைப் பற்றிய கிறிஸ்தவ பற்றுறுதிகளின் மையமாக கருதப்படுகிறது. திரித்துவ ஞாயிறு, கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் வரும் 8ம் ஞாயிறு அதாவது, பெந்தெகொஸ்தே திருநாளுக்கு பின்வரும் ஞாயிறு அனறு ஆசரிக்கப்படுகிறது. திரித்துவத்தின் சாராம்சம் பின்வருமாறு:

(1) தந்தையாகிய கடவுள் - ஒரு படைப்பாளர், விடுவிப்பவர், தலைவர், தந்தை மற்றும் பேரரசர்.

(2) மைந்தனாகிய கடவுள் - மனுக்குலத்தின் மீட்புக்காக உயிர்த்தியாகம் செய்த விடுதலை நாயகன்.

(3) பரிசுத்த ஆவியாகிய கடவுள் - கிருபையின் காலத்தில் விசுவாசிகளோடு இருந்து, உதவிசெய்பவர்.

'திரித்துவம்' என்ற வார்த்தை திருறையில் காணப்படவில்லை. எனினும், திரித்துவமானது பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய கடவுளின் ஆள்தத்துவங்கள், திருமறையிலுள்ள 'படைப்பின் முன்னுரை' 'திரித்துவம்-ஆபிரகாம் சந்திப்பு' 'மாபெரும் கட்டளை' 'இயேசுவின் திருமுழுக்கு' 'இயேசுவின் மறுரூபம்' 'அப்போஸ்தலரின் ஆசீர்வாதம்' போன்ற வேத வசனங்கள் வழியாக புரிந்துகொள்ளப்பட்டு அவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஒன்றாகும்.

மாபெரும் கட்டளை: 'ஆகையால், நீங்கள் போய், மனுக்குலம் முழுவதையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் பெயரில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்' (மத்-28:19).

அப்போஸ்தலர் ஆசீர்வாதம்: 'கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.' (2கொரி-13:13).

வேதபகுதி
தானியேல்
முழுவதும்

# வேதாகம போட்டி-152

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

## வேதவசன இருப்பிடமும் எழுதவேண்டும்

பதிலளிக்க
கடைசி நாள்
ஜூன்-25

1. தரியு ராஜா சிங்கங்களின் கெபிக்கு தீவிரித்துப் போன நேரம் எது?
2. தன் வாயின் பற்களுக்குள்ளே 3 விலா எலும்புகளை கவ்விக்கொண்டிருந்தது எது?
3. மேதிய குலத்தானாகிய அகாஸ்வேருவின் புத்திரனின் பெயர் என்ன?
4. நேபுகாத்நேச்சார் ராஜா பண்ணுவித்த பொற்சிலையின் உயரம், அகலம் என்ன?
5. பிரதானிகளின் தலைவன், 'பெல்தெஷாத்சார்' என யாருக்கு மறுபெயரிட்டான்?
6. தானியேல், ராஜாவிடத்தில் தவணை கொடுக்க விண்ணப்பம் செய்தது எதற்காக?
7. 'சொப்பனங்களை கண்டதால் யாருடைய ஆவி கலங்கி, நித்திரை கலைந்தது?
8. எந்தெந்த ராஜாக்களின் காலத்தில் தானியேலின் காரியம் ஜெயமாய் இருந்தது?
9. 'தேவன் ராஜாக்களைத் தள்ளி பிரபுக்களை ஏற்படுத்துகிறவர்' - சரியா, தவறா?
10. '1335 நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்' - சரியா தவறா?
11. தரியு தன் 62ம் வயதில் ராஜ்யத்தை கட்டிக்கொண்டான்' - சரியா தவறா?
12. எழுதப்பட்ட எழுத்து: 'மெனே, மெனே, இதெக்கேல், ஐபிராத்து' - சரியா தவறா?
13. 'இவன்' தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா ஆகியோரின் விசாரிப்புக்காரன்:
அ) தரியு ஆ) மேல்ஷார் இ) சாத்ராக் ஈ) மொர்தெகாய்
14. நேபுகாத்நேச்சார் மனுஷரினின்று தள்ளப்பட்டு 'இவைகள்' போல் புல்லை மேய்ந்தான்:
அ) முயல்கள் ஆ) ஆடுகள் இ) மாடுகள் ஈ) மான்கள்
15. அன்றாடபலி நீக்கப்பட்டு 'இது' ஸ்தாபிக்கப்படும்வரை 1290 நாள் செல்லும்:
அ) விக்கிரக ஆராதனை ஆ) சுரூபம் இ) ராஜ்யம் ஈ) பாழாக்கும் அருவருப்பு
16. தெக்கேல் என்றால் 'இதில்' நிறுக்கப்பட்டு குறையகாணப்பட்டாய் எனப்பொருள்:
அ) அளவையில் ஆ) எடையில் இ) படியில் ஈ) தராசில்
17. நெருப்பு குழிக்குள் சுற்றுலா, நிமிர்ந்த நடையில் சிற்றுலா! சேதமில்லா 3-பேர், சேர்ந்து நடந்த 4-பேர்! விசுவாச சோதனையில் வெற்றி-முக வீரர்கள்! யார் இவர்கள்?
18. கல்லின் மீது முத்திரை போட்டான், கண்கள் மீது நித்திரை நீத்தான்! விடுவிக்கத் துடித்தான், உண்ணாமல் தவித்தான்! விடிந்ததும் விரைந்து சென்றான், விந்தை-கண்டு வியந்து நின்றான்! யார் இவன்?
19. கைவிரல்கள் கனவில்-வர, கலக்கமுற்றுப் போனான்! காங்கிரீட் சுவரில் எழுத்து-வர கால்-மூட்டு தளர்ந்தான்! அர்த்தமறிய ஆவல்கொண்டு அறைகூவலிட்டான்! யார் இவன்?
20. பொரிச்ச கறி-மீன் அல்ல, பருப்பு காய்-கறி உணவு! வைன்-விஸ்கி-பீர் அல்ல நீர், சுத்த-தண்ணீர்! பத்து வருடம் அல்ல, பத்தே நாள்தான் டெஸ்ட்! பத்து மடங்கு சக்தி பெற்றோர், புத்தி பெற்றோர், வெற்றிபெற்றோர்! யார் இவர்கள்?

**பதில்களை அனுப்பவேண்டிய முகவரி ADDRESS FOR SENDING ANSWERS**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463
Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/siddharmaraja@gmail.com, Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE NAME –'BRANCH' TSE MAKH

## கிளை – என்னும் நாமம்

EPISODE - 49 த்ஸே மாக் பாகம் - 49

இதோ, ஒரு புருஷன், அவருடைய நாமம் கிளை என்னப்படும். அவர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து முளைத்தெழும்பி, கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவார். சக–6:12

Behold, the man whose name is ~The Branch|, shall grow up, and shall build the temple of the Lord. Zec-6:12

சிங்காசனத்தின் மேல் ஆசாரியராயிருந்து ஆளுகை செய்கிற மகிமை பொருந்தினவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளக்கு ஜூன்-மாத ஸ்தோத்திர வாழ்த்துக்கள்.

ஏசா-53:2 இளங்கிளையைப் போலவும் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்.

எரே-1:11பி,12 வாதுமை மரத்தின் கிளையைக் காண்கிறேன் என்றேன். அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே, என் வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார். கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, கிளை என்பது இயேசுவின் 2ம் வருகை மற்றும் அதற்குமுன் பூமியெங்கும் இருப்பவர்கள் கர்த்தரின் இரட்சிப்பைக் காண்பார்கள் என்ற வேதவசனம் நிறைவேறி வருகிறதையும் காட்டுகிறது.

சக-6:15 தேவபிள்ளைகளாகிய நாம் அவரது சத்தம்கேட்டு - வேத வசனத்தின்படி நடக்கும் போது, நம் மூலமாய் (சிதறிப்போன யூத-ஜனங்கள்) கர்த்தருடைய ஆலயம் கட்டப்படும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

எரே-33:15 அந்நாட்களிலும் அக்காலத்திலும் தாவீதுக்கு (இன்று நமக்கு) நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவார். (இயேசுவின் நாமத்தினிமித்தம் நாம் சிறுமைப்படுத்தப் பட்ட இடங்களிலெல்லாம் நமக்கு நீதியின் கிளையை முளைக்கப்பண்ணுவார்).

அப்:-13:47-49, 17:11 வேசனங்களின்படி எழுப்புதல் ஊற்றப்படும்படிக்கு நாம் ஜெபிக்கும் போது, ஜீவனுள்ள வசனங்களைக் காண்பவர்களும் படிப்பவர்களும் இரட்சிக்கப்பட்டு தேவனை மகிமைப்படுத்துவார்கள்.

ஜெபம்: ஈசாயின் வேரும், புறஜாதிகளை ஆளும்படி எழும்புகிறவருமானவரே, உம்மைத் ஸ்தோத்தரிக்கிறோம். உமக்கு அனுதினமும் புது கனிகளை (எசே-48:12) கொடுக்கும்படி உமது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்ந்து வருகிற நதி யோரமாய் எங்களை நட்டு, கிளைகள் மீது பனி இராமுழுதும் தங்கியிருக்கும் விருட்சங்களாய் (யோபு-29:20) எங்களை மாற்றுவீராக. எங்கள் மகிமை எங்களில் செழித்து, எங்கள் கையிலுள்ள எங்கள் வில் புதுபெலன் கொள்வதாக. இயேசுவின் நாமத்தில், ஆமென் பிதாவே.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தொகுப்பு: சகோதரி. C. ஏஞ்சல் B.Sc, திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்துளி வேதவசனக் கதை–145*. . .

# இயேசுவுக்கு முதலிடம் கொடுத்தால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்


சகோ. அசரியா

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.

கிராமம் ஒன்றில் நைட்டிங்கேல் என்ற சகோதரி வாழ்ந்துவந்தார்கள். அவர்களுக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் பிறந்தது ஆனால், தனது 23ம் வயதில் கணவரை இழந்து விட்டார்கள். நைட்டிங்கேல் ஒரு பக்தியுள்ள கிறிஸ்தவப் பெண் ஆகையால், தைரியமாய் வாழ்ந்தார்கள். தனது குழந்தையை வளர்ப்பதற்காக பல வீடுகளில் வீட்டு வேலைகள் செய்தபோதும் கணவரை இழந்ததை எண்ணி துவண்டு விடாமல் இன்னும் அதிகமாக தேவனை கிட்டிச்சேர்ந்து, தினமும் தவறாமல் வேதம் வாசித்து ஜெபித்து மனரம்மியமாக வாழ்ந்து வந்தார்கள். மட்டுமல்ல, தன் வாழ்விலே, இயேசுவுக்கு முதலிடம் அளித்து, தான் செய்யும் எல்லா காரியத்தையும் ஜெபத்துடன் தொடங்குவார்கள். அதோடு, அநேகருக்கு இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கும் கருவியாக தன்னை மாற்றவேண்டும் என ஜெபித்து வந்தார்கள். தனது வீட்டிற்கு வரும் பால்காரர், காய்கறிக்காரர், பேப்பர்காரர் மற்றும் அக்கம் பக்கத்திலுள்ளோர் அனைவருக்கும் இயேசுவின் அன்பைக் கூறி அநேகரை இயேசுவண்டை வழி நடத்தி வந்தார்கள். ஞாயிறு தோறும் ஆலய ஆராதனை முடிந்ததும் இயேசுவை அறியாத கிராம-மக்கள் மத்தியில் உழியம் செய்து திரளான மக்களை இயேசுவண்டை வழிநடத்தி வந்தார்கள்.

இதன் விளைவாக அவர்களது வாழ்க்கையிலே அதிகமான ஆன்மீக மற்றும் உலக ஆசீர்வாதங்களைப் பெற்று, இயேசுவானவர் கொடுத்த ஞானத்தினால், தனது மகளை எம்.ஏ மற்றும் எம்.எட் படிக்கவைத்து ஆசிரியர் பணியில் சேரவும் ஒரு கருவியாக விளங்கினார்கள். பின்னர் கர்த்தரின் கிருபையால் அவர்களது மகள் ஒரு கல்லூரி பேராசிரியரை திருமணம் செய்து குடும்பமாக கல்விப்பணியாற்ற ஒரு கருவியாக அவர் செயல்பட்டார்கள். இவ்விதமாக சகோதரி நைட்டிங்கேல், குடும்பமாக தேவபணி செய்து ஆயிரக்கணக்கான மக்கள் பரலோக பாக்கியத்தை சுதந்தரித்துக்கொள்ள உதவிசெய்யும் ஊழியக்காரியாகவும் விளங்கினார்கள்.

பிரியமானவர்களே, நம் வாழ்விலும் நாம் பல இழப்புகளை சந்திக்க நேரிட்டாலும், சகோதரி நைட்டிங்கேல் போன்று இயேசுவுக்கு முதலிடம் கொடுத்து தைரியமாய் செயல்படும்போது நம்மையும் ஆண்டவர் ஆசீர்வதித்து உயர்த்த வல்லராயிருக்கிறார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். வேதம் இவ்வதமாய் சொல்லுகிறது:

**முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவரது நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்கு கூட கொடுக்கப்படும். மத்–6:33**

**தேவன் தமது ஜனத்தை ஆசீர்வதித்து அவர்களை போஷித்து என்றென்றைக்கும் உயர்த்துவார். சங்–28:9**

**கர்த்தருக்கு பயப்படுகிற பெரியோரையும் சிறியோரையும் ஆசீர்வதிப்பார். சங்–64:10**

EPISODE 11

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...



கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்

இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-3 பகுதி-1

தொகுதி-3 ஐரோப்பிய-ஆசிய தொடர்பு-மோதல் பகுதி-1 மேற்கு கிழக்கை நெருங்குதல்

15ஆம் நூற்றாண்டின் தொடக்க முதல் 17ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை ஐரோப்பியர்கள் உலகம் முழுவதையும் தீவிர ஆய்வுக்கு உட்படுத்தி, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆசியா, ஓசியானியா ஆகிய பெருநிலப் பகுதிகளோடு நேரடி தொடர்பு கொண்டு பூகோளத்தின் வரைபடத்தை உருவாக்கிய காலம். உலக வரைபடத்தை 1502ஆம் ஆண்டு அல்பேர்ட்டோ கன்டீனோ என்பவர் வரைந்தார். கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவிலும், காஸ்பார் கோர்ட்டே-ரேயால் நியூ∴பண்ட்லாந்திலும், வாஸ்கோ-டகாமா இந்தியாவிலும், பேத்ரோ ஆல்வாரெஸ் காப்ரால் பிரேசிலிலும் ஆய்வு நிகழ்த்தியதை இப்படம் மிகத் துல்லியமாகக் காட்டுகிறது. இந்த 'கண்டுபிடிப்புக் காலத்தை' 'ஆய்வுச் செயல்பாடுகள் காலம்' (Age of Exploration) என்றும் 'பெரும் கடற் பயணங்களின் காலம்' (Great Navigations) என்றும் அழைப்பதுண்டு.

பொன், வெள்ளி, வாசனைப் பொருள்கள் போன்றவற்றை வாங்கவும் விற்கவும் ஐரோப்பாவுக்கு அப்பால் உள்ள நாடுகளுக்கு, குறிப்பாக இந்தியா மற்றும் இந்தியக் கலாச்சார வீச்சுக்கு உட்பட்ட நாடுகளுக்கு கடல் வழிகளைக் கண்டு பிடிக்க போர்த்துகல் மற்றும் எசுப்பானியா ஆகிய நாடுகள் மேற்கொண்ட முதன்முயற்சிகள் நிகழ்ந்த காலம் 'கண்டுபிடிப்புக் காலம்' ஆகும்.

'கண்டுபிடிப்புக் காலம்' என்பது நடுக்காலத்துக்கும் (Middle Age), நவீன காலத்துக்கும் (Modern Period) பாலமாக அமைகின்றது. புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட நாடுகள் பற்றிய சுவையான தகவல்களும் அவற்றின் வரைபடங்களும் அச்சு இயந்திரக் கண்டுபிடிப்பின் உதவியோடு மக்களுக்கு எளிதாகக் கிடைத்தன. தொலை நாடுகள் பற்றிய தகவல்களை அறியவேண்டும் என்னும் ஆர்வம் மக்களிடையே எழுந்தது. ஐரோப்பிய நாடுகள் கடல் கடந்து பயணம் சென்று உலகின் பல பகுதிகளில் வாணிபம் செய்ததோடு நிற்காமல், அங்கு குடியேற்றங்களையும் அமைத்து குடியேற்ற ஆதிக்கப் பேரரசுகளையும் நிறுவின.

இவ்வாறு ‘பழைய’ உலகாகிய ஆசியா, ஐரோப்பா ஆகிய பெரும் நிலப்பகுதிகள் மற்றும் ‘புதிய’ உலகாகிய அமெரிக்க போன்ற கண்டங்களிடையே கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்தது.

பலவகையான செடிகொடிகள், விலங்குகள், உணவுகள், அடிமைகள் உட்பட்ட மக்கள் குழுக்கள், தொற்று நோய்கள் என ‘பழைய’ உலகிலிருந்து ‘புதிய’ உலகுக்கும் ‘புதிய’ உலகிலிருந்து ‘பழைய’ உலகுக்கும் கொண்டுசெல்லப் பட்டன. உலகின் கிழக்குப் மேற்கு வடக்குப் பகுதிக்கும் இடையே கலாச்சாரப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. போர்ச்சுக்கல் நாட்டவர் 1418முதல் ஆப்பிரிக்க கண்டத்தின் அட்லான்டிக் கடலோரத்தை ஆய்வுக்கு உட்படுத்தினார்கள். ஆப்பிரிக்கா கண்டத்தின் அட்லான்டிக் கடலோரமாகப் பயணம் மேற்கொண்ட பார்த்தலோமேயு டயாஸ் என்னும் போர்த்துகேசியர் 1498 இல் இந்தியப் பெருங்கடலைச் வந்தடைந்தார். அதே கடல்வழியில் பயணம் மேற்கொண்டு அடுத்த முப்பது ஆண்டுகாலத்தில் பல கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன.

ஐரோப்பிய அட்லான்டிக் கடல் ஓரத்தில் இருந்து மேற்கு நோக்கிக் கடல் பயணம் மேற்கொண்டு இந்திய நாட்டுப் பகுதிகளோடு வியாபாரம் செய்ய கடல் வழி கண்டுபிடிக்கும் முயற்சி தொடங்கியது. எசுப்பானிய மன்னரின் ஆதரவின் கீழ் கிறிஸ்டோபர் கொலம்பஸ் 1492 இல் இத்தகைய பயணத்தை மேற்கொண்டார். ஆனால் ஆசியாக் கண்டத்தில் இந்திய நாட்டுப் பகுதிகளைச் சென்று அடைவதற்குப் பதிலாக கொலம்பஸ் ஒரு புதிய கண்டத்தைச் சென்றடைந்தார். ஐரோப்பியர் அதை ‘அமெரிக்கா’ என்று அழைத்தனர்.

புதிய நாடுகளில் வணிக உரிமையும் பிற உரிமைகளும் யாருக்கு என்பதில் எசுப்பானியாவுக்கும் போர்த்துகல் நாட்டுக்கும் இடையே மோதல் ஏற்படுவதைத் தவிர்க்க இரு நாடுகளும் பூகோளத்தை இரண்டாகப் பங்கீடு செய்து, ஒப்பந்தம் செய்துகொண்டன. அது ‘தோர்தேசீல்லாஸ் ஒப்பந்தம்’ (Treaty of Tordesillas) என்று அழைக்கப்படுகின்றது. இதன்படி போர்த்துகீசியரான வாஸ்கோ டகாமா ஓர் ஆய்வுக் குழுவுக்குத் தலைமை தாங்கி, இந்தியாவுக்குக் கடல் பயணம் மேற்கொண்டார். ஆசிய கண்டத்தோடு நேரடி வணிகத்தில் ஈடுபடுவதற்குக் கடல்வழி கண்டுபிடிப்பதே அவர்களுடைய நோக்கமாக இருந்தது. வாஸ்கோ-டகாமா, ஆப்பிரிக்கா கண்டத்தைச் சுற்றிக் கடலோரமாகச் சென்று இந்தியா செல்ல எண்ணினார் அவருடைய கனவு 1498ல் நிறைவுற்றது. அதைத் தொடர்ந்து, விரைவிலேயே போர்த்துகீசியர்கள் இன்னும் கிழக்கு நோக்கிக் கடல்பயணம் சென்று, ‘வாசனைப் பொருள்கள் தீவுகள்’ என்று அழைக்கப்பட்ட மலுக்கு தீவுகளை 1512ல் அடைந்து மறுஆண்டிவட சீனாவைச் சென்று சேர்ந்தார்கள்.

இவ்வாறு, பசிபிக் பெருங்கடலின் கிழக்குப் பகுதி மற்றும் அதன் மேற்குப் பகுதி பற்றிய தகவல்கள் 1512ம் ஆண்டளவில் ஓராண்டுக்குள் ஐரோப்பாவைச் சென்று சேர்ந்தன. மேற்கு நோக்கிய கடல்பயணம் ஒருபக்கம், கிழக்கு நோக்கியகடல்பயணம் மறுபக்கம் என்று இரு பயணப் பாதைகள் முதலில் பிரிந்து சென்றாலும், அவை 1522ல் ஒன்றையொன்று சந்தித்தன. அதாவது, பெர்டினாண்ட் மகெல்லன் என்ற போர்த்துகீசிய கடல்பயணி மேற்கு நோக்கிய கடல்பயணத்தை எசுப்பானியா நாட்டு சார்பில் மேற்கொண்டு, கடல்வழியாக முதல்முறையாக பூகோளத்தைச் சுற்றிவந்தார். அதே சமயத்தில் எசுப்பானிய ‘ஆக்கிரமிப்பாளர்கள்’ அமெரிக்கா கண்டத்தின் உள்நாட்டுப் பகுதிகளையும், பிறகு தென் பசிபிக் தீவுகளையும் தங்கள் ஆய்வுச் செயல்பாடுகளுக்கு உட்படுத்தினார்கள்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் ஜெபக்குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் சூடான்-உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், வங்க தேசம், ஆப்கானிஸ்தான் பொரு ளாதாரம் சீரடைய... பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் போன்றவை வேரறுக்கப்பட... சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒடுக்குதல் கள் குறைய... இந்திய ஒன்றிய அரசு மக்களை பாரபட்சமின்றி நடத்த... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-பிரிவினை வாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோ ருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) நம் பிள்ளைகள் கி.ஃப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ.ஃப்னா, ஜாஷ்வா மேத்யூ ஆகியோரின் உயர்-கல்வி படிப்பிற்காக...

6) திரு. நெல்சன் (நகோமி), திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ரூபவதி நோபிள், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. விமலா டேவிட், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு.டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ஜெயம் மேரி நெல்சன், திருமதி. கஸ்தூரி எலியாஸ், திருமதி. சார்லட் டேவிட், திருமதி. ஷீலா பிரசாத் சாமுவேல், திரு. நிக்ஸன் எவர்பிரைட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோரது குடும்பங்களுக்காக...

9) திருமதி. ஃபிரீடா தங்கதுரை, அருட்பணி. எஸ்தர் கிங்ஸ்லி சுகபிரசவத்துக்காக...

10) 12ம், 11ம், 10ம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றிபெற்று உயர்-கல்விக்கு முயற்சி செய்யும் நம் பிள்ளைகளுக்கு அவர்கள் விரும்பிய படிப்பில் இடம் கிடைக்க, வெற்றியை தவறவிட்ட வர்களுக்கு துணைப்-பொதுத்-தேர்வில் நல்ல ரிசல்ட் கிடைக்க...

# ஜெப-ஜன்னல் நன்றி பலிகள்

**கர்த்தருக்கு நன்றி பலிகளைச் செலுத்துவோம் - Come! Let us thank God**

நமது ஊழிய இயக்குநரின் மகன்-மருமகள் (அருட்திரு. த. சைமன் சாமுவேல்-திருமதி. அனி ஜெய பிரீத்தி) ஆகியோருக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. திருமதி. பிரீத்தி அவர்களை பிரசவத்தில் பாதுகாத்து, அருமையான ஆண் குழந்தையைக் கொடுத்த தேவாதி தேவனுக்கு அனந்த கோடாகோடியாய் நன்றிபலிகளைச் செலுத்துவோம்...

# வேதாகம போட்டி-151 (எசேக்கியேல்) சரியான விடைகள்

1. தீரு ராஜா எசே:-27:12
2. கர். மகிமை எசே:-11:23
3. 9ம்-வரு, 10ம்-மாத, 10ம்-தேதி எசே:-24:1
4. ஆசாரியர்கள் எசே:-44:31
5. நகரத்தின் வாசல்கள் எசே:-48:31
6. பாபிலோன் ராஜா எசே:-21:21
7. தீருவின் அதிபதி எசே:-28:2, 3
8. கேபார் எசே:-1:3
9. சரி எசே:-45:12
10. சரி எசே:-18:4, 20
11. தவறு எசே:-37:14
12. தவறு எசே:-4:17
13. ஈ - சங்காரம் எசே:-7:25
14. இ - சாஸ்திரிகள் எசே:-27:8
15. ஆ - அநியாயம் எசே:-33:18
16. அ - வனாந்தரங்களில் எசே:-13:4
17. சகல கொடிய அருவருப்பு எசே:-8:9,10
18. எருசலேம்-சீயோன் எசே:-16:2,46
19. நகரத்தின் வாசல்கள் எசே:-48:31-34
20. எருச.நகரம், இஸ்ர.வம்சம் எசே:-4:1-3

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL:** 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL:** ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO:** 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

## திருத்துவத் திருநாள் - Trinity Sunday நல்வாழ்த்துக்கள்

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், நல்ல-விதைகள்-கைபிரதி களப்பணியாளர்கள், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள், அனைத்துத் திருச்சபை விசுவாசக் குடும்பத்தார் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த
திரித்துவத் திருநாள்-2023
நல்வாழ்த்துக்கள்.
கர்த்தர் உங்களை

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்



Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
The due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 9th June 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. பங்களாதேஷ் நாட்டில், மூலப்பொருள் தட்டுப்பாடு, அன்னிய செலாவணி பற்றாக்குறை போன்ற காரணங்களால் மருந்துவகைகள் 90சதமும், மருத்துவ உபகரணங்கள் 400சதமும் விலை உயர்ந்துள்ளதாக தகவல்.

2. இந்தியாவில் உள்நாட்டு விமானப் பயணிகளின் எண்ணிக்கை 5கோடியே 4லட்சம் என்ற அளவை எட்டியுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 42.85சதம் அதிகம். கடந்த ஆண்டு 3.5கோடி பேர் பயணித்து இருந்தனர்.

3. தமிழ்நாட்டில் அரசு குத்தகைக்கு விட்டுள்ள சொத்துகள், குத்தகை-காலம், குத்தகை-தொகை ஆகிய விவரங்களை மாவட்ட-ஆட்சியர்கள் அரசு-இணையத்தில் பதிவேற்றம் செய்ய சென்னை ஐகோர்ட் உத்தரவு.

4. இந்திய கிரெடிட் கார்டுகளை வெளிநாடுகளில் பயன்படுத்துவதற்கான வரி (TCS) 20சதவீதமாக உயர்த்தப்படுவதாகவும், வரும் ஜூலை 1-ம் தேதி முதல் இது நடைமுறைக்கு வருவதாகவும் ஒன்றிய அரசு அறிவிப்பு.

5. ஜூன்-21 - ஜூலை-4வரை பெங்களூரில் நடைபெறும் தெற்காசிய கால்பந்து தொடரில் பாகிஸ்தான், நேபாளம் குவைத், இந்தியா உள்ளிட்ட நாடுகள் ‘ஏ’ பிரிவிலும், லெபனான், வங்கதேசம், மாலத்தீவு, பூடான் உள்ளிட்ட நாடுகள் ‘பி’ பிரிவிலும் விளையாடுகின்றன.

**Posted on: 9 June 2023**

**To**

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI-93. TAMIL NADU, SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.